**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**20th அக்டோபர் / October 2024 ஞா யிறு ஆராதனை**
**Childrens Sunday**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. தெரேஸ் தேன்மொழி**<br>Mrs. Therese Thenmozhi |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. தெரேஸ் தேன்மொழி**<br>Mrs. Therese Thenmozhi |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**இயேசு எங்கள் மேய்ப்பர்**

*1. இயேசு எங்கள் மேய்ப்பர்,*
*கண்ணீர் துடைப்பார்;*
*மார்பில் சேர்த்தணைத்து*
*பயம் நீக்குவார்;*
*துன்பம் நேரிட்டாலும்*
*இன்பம் ஆயினும்,*
*இயேசுவின்பின் செல்வோம்*
*பாலர் யாவரும்.*

*2. நல்ல மேய்ப்பர் சத்தம்*
*நன்றாய் அறிவோம்*
*காதுக்கின்பமாக*
*கேட்டுக் களிப்போம்;*
*கண்டித்தாலும், நேசர்*
*ஆற்றித் தேற்றுவார்;*
*நாங்கள் பின்னே செல்ல*
*வழி காட்டுவார்.*

*3. ஆட்டுக்காக மேய்ப்பர்*
*ரத்தம் சிந்தினார்;*
*அதில் மூழ்கினோரே*
*தூயர் ஆகுவார்; '*
*பாவ குணம் நீக்கி*
*முற்றும் ரட்சிப்பார்;*
*திவ்விய தூய சாயல்*
*ஆக மாற்றுவார்.*

*4. இயேசு நல்ல மேய்ப்பர்*
*ஆட்டைப் போஷிப்பார்;*
*ஓனாய்கள் வந்தாலும்,*
*தொடவே ஒட்டார்;*
*சாவின் பள்ளத்தாக்கில்*
*அஞ்சவே மாட்டோம்;*
*பாதாளத்தின்மேலும்*
*ஜெயங்கொள்ளுவோம்.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 42ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 121" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்"

**Psalter Reading "Psalm 121"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறுவர்கள் சிறப்புப் பாடல்**<br>Children's Special Song | |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**பாவத்தின் பலன் நரகம்**

*1. பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ கண்*
*காண்பதெல்லாம் அழியும் காணாததல்லோ நித்தியம்*

**ஏசுராஜா வருவார்**
**இன்னும் கொஞ்சங் காலம்தான்**
**மோட்சலோகம் சேர்ந்திடுவோம்**

*2. உலக இன்பம் நம்பாதே அதின் இச்சை யாவும் ஒழியும்*
*உன் ஜீவன் போகும் நாளிலே ஒரு காசும் கூட வாராதே*

*3. உன் காலமெல்லாம் போகுதே உலக மாயைகளிலே*
*ஓ! தேவ கோபம் வருமுன் உன் மீட்பரண்டை வாராயோ*

*4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே கல்வாரி மலைதன்னிலே*
*உன் பாவம் யாவும் நீங்கிப்போம் அதில் ஸ்நானம் செய்வதாலே*

*5. மா பாவியான என்னையும் நேசர் ஏற்றுக் கொண்டாரே*
*ஓ! பாவி நீயும் ஓடிவா தேவாசீர்வாதம் பெறுவாய்*

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>***வெளி 14 : 14 - 20***<br>Scripture Reading<br>**Revelation 14 : 14 - 20** | Master. John and Jayden |

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

<u>***காலத்தின் அருமையை***</u>

***காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்***
***கண்ணீர் விடுவாயே.***

***ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தைச்***
***சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்***

*1. மதியை யிழந்துதீய வழியிலே நீ நடந்தால்*
*வருங்கோபம் அறிந்திடாயோ?*
*கதியாம் ரக்ஷண்ய வாழ்வைக் கண்டு நீ மகிழ்ந்திட*
*காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ?*

*2. இகத்தினில் ஊழியம் அகத்திடம் நிறைவேற*
*ஏசுனை அழைத்தாரல்லோ*
*மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்*
*பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்?*

*3. நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு*
*நோக்கிப் பின் அழித்தாரன்றோ?*
*தாவாத கிருபையால் தாங்கி உனக்களித்த*
*தவணையின் காலமிவ் வருட முடியலாமே.*

*4. முந்தி எரேமியா அனனியாவுக் குரைத்த*
*முடிவை நீ யறியாயோ!*
*எந்தக் காலமும் சிரஞ்சீவியென் றெண்ணிடாமல்*
*ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ!*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனங்கள்** — **சபையார் இணைந்து**
Weekly Memory Verses — Congregation
***வெளி 14 : 15***
**Revelation 14 : 15**

15. **அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது அறுக்கிறதற்குக் காலம் வந்தது ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.**

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**